MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

# ஆற்றுப்படை இலக்கியங்களில் பண்பாட்டுக்கூறுகள்

திருமதி மா.முத்து காயத்ரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
muthugayathri-tam@sfrcollege.edu.in

DOI 10.5281/zenodo.10652735.

**Abstract**

Literature is a repository that records and preserves the development and evolution of the environment. People and their cultural practices are changing with the change of time. Some people live by forgetting the culture itself. But in the life of our ancient people, culture and customs have been greatly respected and observed through the literature that appeared at that time. In this way, the Sangam literature that appeared in the 500th century BC describes the life of Palantamizhar. This review article takes the cultural elements such as customs, diets, beliefs, pastimes, etc. embedded in Aartuppdai literature, which is one of the Sangam literatures.

Key Words: Aartuppadai - Sangam Literature - Ancient Literature

**முன்னுரை**

இலக்கியங்கள் காலச்சூழலின் வளர்ச்சிப் பரிணாமத்தைப் பதிவுசெய்துப் பாதுகாக்கும் பெட்டகமாகும். கால மாற்றத்திற்கேற்ப மக்களும் அவர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் மாறிக்கொண்டு தான் வருகின்றன. சிலர் பண்பாட்டினையே மறந்து வாழ்ந்துக் கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் நம் பழந்தமிழரின் வாழ்வியலில் பண்பாடு, பழக்கவழக்கங்கள் பெரிதும் மதிக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளதை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மூலம் உணரலாகின்றது. அவ்வகையில் கி.மு.500 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியலைப் பறைச்சாற்றுகின்றன. சங்க இலக்கியங்களுள்

ஒன்றான ஆற்றுப்படை இலக்கியங்களுள் பொதிந்துள்ள பண்பாட்டுக்கூறுகளான பழக்கவழக்கங்கள், உணவுமுறைகள், நம்பிக்கைகள், பொழுதுபோக்குகள் முதலியவற்றை எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**பண்பாடு – விளக்கம்**

பண்பாடு என்பதற்கு 'பண்படுதல்','சீர்படுத்தல்','திருத்தல்' என்று பொருள் உண்டு. சமூகத்தில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனையும் நல்முறையில் ஒழுங்குப்படுத்துவது 'பண்பாடு' ஆகும். பண்பாட என்பது வாழ்க்கைமுறையாகும். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு பண்பாட்டுக் கலாச்சாரம் உண்டு. **"பண்பாடானது இசை, இலக்கியம், ஓவியம், வாழ்க்கைமுறை, உணவுமுறை, நாடகம், சிற்பம், திரைப்படம் போன்ற மனிதனுடைய கலைப்பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றன."**[1] என்று பண்பாடு குறித்து விளக்கமளிக்கிறார், எட்வார்ட் டெயிலர்.

பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் தங்களின் வாழ்க்கைத் தேவைக்களுக்காக செய்துக் கொள்ளும் அனைத்து வளையானப் பொருட்களும், பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். மக்களின் பொருள் வடிவம் பெறாத கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன பொருள் சாராப் பண்பாட்டில் அடங்கும்.

**ஆற்றுப்படை இலக்கியங்கள்**

செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கியமானது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இணைந்தவையாகும். பத்துபாட்டில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் இடம்பெற்றுள்ளன. இவை பிற்கால காப்பிய மரபிற்கு அடிப்படையாக அமைந்தவை. அவை,

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. கூத்தராற்றுப்படை(மலைபடுகடாம்) – முதலியன ஆகும்.

ஆற்றுப்படை என்பதற்கு ஆற்றுப்படுத்துதல், வழிப்படுத்துதல் என்று பொருள். 'வள்ளல் ஒருவரிடம் தன் வறுமையைப் போக்கும் வளங்களைப் பெற்றுவந்த ஒருவர், கூத்தர், பாணர், பொருநர், விறிலி முதலானோரை அவரிடம் செல்லுமாறு வழி சொல்லி அனுப்புவது, ஆற்றுப்படை ஆகும்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"**[2]

என்று தொல்காப்பியர் ஆற்றுப்படைக்கு இலக்கணம் விதித்துள்ளார். **"ஆற்றுப்படை என்ற ஓர் இலக்கிய மரபினை நாம் வேறு எம்மொழியிலும் காண இயலாது. அது தமிழுக்கே தனிச்சிறப்பாக அமைந்தாகும்."**[3] என்பார் சி.பாலசுப்பிரமணியம்.

**ஆற்றுப்படை இலக்கியங்களில் பண்பாட்டுக்கூறுகள்**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை மற்றும் கூத்தராற்றுப்படை முதலிய சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் ஆற்றுப்படுத்தும் இலக்கியங்கள் உள்ளடக்கியுள்ள பண்பாட்டுக்கூறுகளான இறைநம்பிக்கை, சமூக நிலை, உணவுப்பழக்கம், விருந்தோம்பல் பண்பு, கொடைத்தன்மை, இசைக்கலை, போன்றவை பழந்தமிழரின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ளன.

**இறை நம்பிக்கை**

சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை இறைவனின் மீது நம்பிக்கை வைப்பது என்பது மாறவில்லை. ஏனெனில் 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்பதே உண்மை. தமிழ்க்கடவுள் முருகனின் பக்தர்கள், மலையே குலைந்தாலும் வானமே இடிந்தாலும் பூமியே பிளந்தாலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையோடு, முருகனே தண்டையணிந்த உன் அழகிய திருவடிக் கோலத்தை எப்போதும் நம்பிக்கையோடு நான் தொழுது வாழ்வேன் என்று வணங்குவதை,

> **"முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்**
>
> **மருகனே! ஈசன் மகனே! – ஒரு கை முகன்**
>
> **தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்**
>
> **நம்பியே கைதொழுவேன், நான்."[4]**

என்ற பாடலடிகள் மூலம் நக்கீரர் விளக்கியுள்ளார்.

**சங்க கால சமூக நிலைமை**

சங்க காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்கள் இருந்தன. அக்காலத்தில் தலைமக்கள், பொது மக்கள் என்று இரு பிரிவினை மட்டுமே காணப்பட்டன. இக்கால சமூகத்திலுள்ள பல்வேறு சாதிய பிரிவினை போன்று இல்லாமல், அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என மக்கள் அவரவர் செய்யும் தொழில் அடிப்படையில் மட்டுமே பிரிக்கப்பட்டனர்.

**உணவுப்பழக்கம்**

மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு வேண்டிய அத்தனை உணவுப்பொருட்களும் இயற்கை அன்னை கொடுத்த நன்கொடையாகும். **“உலகில் முதன்முதலில் உணவை நாகரிகமாக சமைத்தவன் தமிழனே என்றும் முதன்முதலில் குழம்பு காய்ச்சப் பெற்றது தமிழகத்திலேயே தான்”**[5] **-** என்று ஞா.தேவநேயப்பாவாணர் விளக்குகிறார். மனிதனின் முதல் பணியாக உணவுத் தேடல் விளங்கிற்று. உணவைப் பச்சையாகவும் வேகவைத்தும் பதப்படுத்தியும் பயன்படுத்தினர். உணவு என்பது பல பொருட்களின் கூட்டுக்கலவை ஆகும். பண்டைத் தமிழர்கள் சமைக்கும் உணவின் தரமானது அவர்கள் வாழக்கூடிய நிலத்தின் தன்மையைப் பொறுத்து அமைந்தன. **“உணவெனப் படுவது நிலத்தொடு நீரே”**[6] என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

சங்க கால மக்கள் அவரவர் இல்லங்களில் ‘கள்’ சமைத்து பருகியதாக **பெரும்பாணாற்றுப்படையில்** குறிப்பு உள்ளது. வெண்ணெல், செந்நெல், சாமை, கடமான், பன்றி, ஆட்டு மாமிசம், உடுப்புக்கறி ஆகிய உணவுகளின் தன்மையை **கூத்தராற்றுப்படை** விளக்குகிறது. எயினர்கள் களர்நிலத்தில் வளரக்கூடிய ஈச்சம்பழம் போன்ற மேட்டு நிலத்தில் விளைந்த செல் சோற்றினை நாய் வேட்டையாடிக் கொணர்ந்த உடும்புக் கறியோடு உண்டு மகிழ்ந்ததை,

**"களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன**

**கவல் விளை நெல்லின் செவ்வவிழ்**

**ஞமலி தந்த மனவுச்சூழல் உடும்பின்**

**வறை கால் யாத்தது"[7]**

என்று பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் புலப்படுத்துகின்றன. முல்லைநில மக்களை பெரும்பாணாற்றுப்படை **'கூழ் ஆர் இடையன்'** எனக் குறிப்பிடுகின்றது. இவர்கள் தமது உணவுடன் அவரைப் புழுக்கினையும் சேர்த்துக் கொள்வர். வரகரிசிச் சோறும் அவரைப் பருப்பும் கலந்து செய்த 'கும்மாயம்' என்ற உணவினை உண்டனர். இதனை,

**"நெடும் குரல் பூளை பூவின் அன்ன**

**குறும் தாள் வரகின் குறள் அவிழ் சொன்றி**

**புகர் இணர் வேங்கை வீகண்டு அன்ன**

**அவரை வான் புழுக்கு அட்டி பயில்வுற்று"[8]**

மருதநில மக்கள் உலக்கையால் குற்றி எடுத்த அரிசியில் செய்த வெள்ளிய சோற்றுடன் நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவைக் கறியை உண்டனர். இதனை,

**"இருங் காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த**

**அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**

**கவைத் தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்"[9]**

என்று சிறுபாணாற்றுப்படை விளக்குகின்றது.

**விருந்தோம்பல் பண்பு**

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் மிகச்சிறந்தப் பண்பாகும். பழந்தமிழர்கள் தம் வீட்டிற்கு வந்த புதியவர்களுக்கு உணவுக் கொடுத்து அவர்க்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து மகிழ்த்து தான் வழியனுப்பினர்.

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து.”[10]**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, பொருநராற்றுப்படையில், வீரமும் இரக்க குணமும் ஒன்றாக அமையப் பெற்ற கரிகாலன், தன் அரண்மனை வாசலில் பொருநர்கள் வந்து கூடியவுடன் வாயிற்காவலனிடம் அனுமதி பெறாமல் உள்ளே வர அனுமதி அளிப்பவர். அப்பொருநர்கள் இனிய பாடல்களைப் பாடுவர். அதனை கேட்ட உடனே அம்மன்னன் பொருநர்களின் அருகில் சென்று நெருங்கிய நண்பர்போல் நினைத்து இன்முகத்துடன் வரவேற்று மகிழ்விப்பான் என்பதை,

**“ஒன்றிய கேளிர் போல கேள்கொளல் வேண்டி**

**கண்ணின்காண நண்ணுவழி இரீஇ**

**பருகு அன்ன அருகா நோக்கமோடு,**

**உருகுபவை போல், என்புகுளிர் கொளீஇ”[11]**

முல்லை நில மக்கள் தம் இல்லத்திற்கு வந்த விருந்தினரான பாணருக்கு இனிய புளிங்கறி இட்ட சோற்றுடன் மான் இறைச்சி நிரம்பக் கொடுத்து பசித் தணித்தனர்.

**“எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**

**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**

**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்”[12]**

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

உழவுத் தொழிலின் மேன்மை உணர்ந்த தண்டலை உழவர்கள் தம் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு இனிப்புசுவை நிறைந்த மிகப் பெரிய பலாப்பழம்,தெங்கு வாழைப்பழம், பனைநுங்கு முற்றிய நல்ல கிழங்கு போன்றவற்றை கொடுத்து மகிழ்ந்ததை,

**"தண்டலை உழவர் தனிமனைச் சேப்பின்**

**தாழ்கோட் பலவின் சூழ்களைப் பெரும்பழம்**

**திம்பல் தாரம் முனையிற் சேம்பின்**

**முனைப்பலும் முதிர்கிழங்க ஆர்குவிர்"[13]**

**கொடைத்தன்மை**

கொடை என்பது தன்னால் இன்றவரை துன்பத்தில் இருப்போர்க்கு உதவி செய்வதாகும்.

**"தாளாற்றித் தநடத பொருளெல்லாம் தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தற் பொருட்டு"[14]**

சங்க காலத்தில் அரசர் கொடை வள்ளல்களாக இருந்தனர். தம்மை நாடி வந்தவர்களை இன்முகத்தோடு வரவேற்று, விருந்தளித்து, கொடையளித்து அவர்கள் வறுமையைப் போக்கி வழியனுப்பினர். கரிகாலச் சோழன் இசைக் கலைஞரின் ஏழிசைக்குத் தக்க பின்னால் நடந்து சென்று வெண்குதிரைகள் பூட்டி தேரில் வழியனுப்பினான். அவர்களுக்கு யானைக்கூட்டத்தையும் பொன் பொருளையும் அவர் அணிந்து கொள்வதற்கு பாம்பின் தோலை விட மென்மையான விலையுயர்ந்த ஆடைகளையும் கணக்கின்றி வழங்கியதை,

**"காலி னேழடிப் பின்சென்று கோலின்**

**றாறகளைந் தேறென் றேற்றி வீறுபெறு**

**பேரியாழ் முறையுழிக் கழிப்பி நீர்வாய்த்**

**தண்பணை தழீஇய தளரா விருக்கை**

**நன்பல் லூர நாட்டொடு நன்பல்”**[15]

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**இசைக்கலை**

சங்க காலத்தில் இசைக்கருவிகள்,பண்கள்,இசைவாணர்கள் ஆகியோர் வாழ்ந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறியலாகின்றது. இசைக்கலை மிகவும் தொன்மையானது. ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு பண் வகைகளும் இசைக்கருவிகளும் இருந்தன. இசையின் தொன்மையை,

**“அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**

**உளவென மொழிய இசையொடு சிவணிய**

**நரம்பின் மறைய என்மனார் புலவர்”**[16]

என்ற நூற்பா மூலம் அறியமுடிகின்றது. பண் இசைத்து பாடுபவர்கள், பண்ணுக்கு ஏற்றப் பாடல்களை எழுதுபவர்கள் ‘பாணர்கள்’ என்றும், யாழ் இசைத்து பாடுபவர்கள் ‘யாழ்ப்பாணர்கள்’ என்றும் அழைத்தனர். சிறுபாணாற்றுப்படையில் யாழ்பாணர்கள் சீரியாழ் இசைத்து, அரசனை ஐம்பெரும் குறவர் முதியோர்க்கு குவித்த கைகளை உடையோய், வீரர் படை கருவிகள் எரிவதற்கு காட்டின மார்பினை உடையோய், ஏரினையுடைய குடிமக்களுக்கு நிழல் செய்த செங்கோலைஉடைய அரசனே என்று புகழ்ந்து பாடியதை,

**“அமிழ்து பொதிந்து இலிற்றும், அடங்கு புரி நரம்பின்**

**பாடுதுறை முற்றிய பயன் தெரி கேள்விக்**

**கூடு கொள் இன் இயம் குரல் குரலாக...”**[17]

என்ற பாடலடிகள் விளக்குகினள்றன.

**முடிவுரை**

சங்க கால இலக்கியமான பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை மற்றும் கூத்தராற்றுப்படை முதலிய ஆற்றுப்படுத்தும் இலக்கியங்கள் உள்ளடக்கியுள்ள பண்பாட்டுக்கூறுகளான, இறைவனின் மீதுள்ள நம்பிக்கை, சமூதாய நிலைமை, ஒவ்வொரு நிலத்திற்கேற்ப வெவ்வேறு உணவுப்பழக்கம், வந்தாரை வரவேற்று விருந்தோம்பல் செய்யும் பண்பு, கொடைத்தன்மை, இசைக்கலை, போன்றவை பழந்தமிழரின் வாழ்வியலோடு பிரிக்கமுடியாது பின்னிப்பிணைந்துள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. எட்வார்ட் டெயிலர், பண்பாடும் மானிடவியலும்.
2. தொல்காப்பியர், புறத்திணையியல்,36.
3. சி.பாலசுப்பிரமணியம், சங்க இலக்கியம் சில பார்வைகள்.
4. திருமுறுகாற்றுப்படை,7.
5. ஞா.தேவநேயப்பாவணர்,தமிழர் வரலாறு.
6. புறநானூறு,18
7. பெரும்பாணாற்றுப்படை,129-132.
8. மேலது,192-195.
9. சிறுபாணாற்றுப்படை,193-195
10. திருவள்ளுவர், திருக்குறள், 90.
11. பொருநராற்றுப்படை, 78-83
12. பெரும்பாணாற்றுப்படை,84-86.

13. மேலது,116-118.

14. திருவள்ளுவர், திருக்குறள், 222.

15. பொருநராற்றுப்படை, 160-170.

**16.** தொல்காப்பியர், நூன்மரபு,33.

17. சிறுபாணாற்றுப்படை,226-228.